**தேசிய விவசாய வாணிப அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2015**

---

தேசிய விவசாய வாணிப அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் (ஐஎவ்ஏடீ) இடையே கைச்சாத்திடப்பட்ட 2010 பெப்ரவரி 23 ஆந் திகதிய 797-எல்கே ஆம் இலக்க நிதியிடல் உடன்படிக்கையின் IX ஆம் உறுப்புரையிலுள்ள 9.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்ட அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் செயற்திட்டக் காலம்**

---

தேசிய விவசாய வாணிப அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதியிடல் உடன்படிக்கையின் பிரகாரம், இலங்கை மத்திய வங்கி முன்னணி நிகழ்ச்சித்திட்ட முகவராக இருந்தது. இருப்பினும், 2013 சனவரியில் இடம்பெற்ற விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தின் இடைக்கால மீளாய்வு தூதுக்குழுவின் பரிந்துரைகளின் படி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ''திவிநெகும'' நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைக்கும் முன்னனி நிகழ்ச்சித்திட்ட முகவராக பெயரிடப்பட்டிருந்தது. 2015 ஏப்ரல் 30 ஆந் திகதிய 15/0519/605/009-1 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டமானது பின்னர் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சிற்கு மாற்றப்பட்டிருந்தது. நடைமுறையில், நிகழ்ச்சித்திட்டத்தின் பணிகள் சனாதிபதி செயலகத்தின் மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தப்படுகின்றன. (அ) சந்தைச் சங்கிலி அபிவிருத்தியில் பங்குபற்றுதல் மற்றும் பண்ணை உற்பத்தி விலைகளை முன்னேற்றுகின்ற இணைந்த கூறுகள், பண்ணை உற்பத்தி விளைவுதிறன் மற்றும் செயன்முறைப்படுத்தப்பட்ட பண்ணை உற்பத்திப்பொருட்களிற்கு பெறுமதிசேர்த்தல் ஊடாக விசேடமாக இளைஞர்களது வருமானத்தை அதிகரிக்கச் செய்தல் மற்றும் (ஆ) காணியற்றவர்களிற்கும் இளைஞர்களிற்கும் வேலைவாய்ப்புக்களை மேம்படுத்தி அதிகரிப்பதற்காக நிதிகளையும் பயிற்சிகளையும் வழங்குவதன் மூலம் சிறிய விவசாயிகள் மற்றும் காணியற்றவர்களிற்கு உதவியளிப்பதே நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்களாகும். நிதி உடன்படிக்கையின்படி நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 4,309.52 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 32.96 மில்லியனாவதுடன் அதில் 3,268.75 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 25 மில்லியன் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தினால் நிதியளிப்பதற்கு இணங்கப்பட்டது. எஞ்சிய நிதியானது இலங்கை அரசாங்கம், தனியார் கம்பனிகள், உற்பத்தியாளர்கள், சமூக அடிப்படை அமைப்புக்கள் மற்றும் பங்குபற்றல் நிதி நிறுவனங்களால் பங்களிப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சித்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2011 பெப்ரவரி 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2016 மார்ச் மாதமளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும், நிகழ்ச்சித்திட்டத்தின் பூர்த்தியாக்கல் திகதியானது 2017 செப்தம்பர் 30 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்டத்தின் முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர்களின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளில் விசேட (டொலர்) கணக்கின் புதுப்பித்தல் மற்றும் மீள்பெறுகை மற்றும் அதன் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியானது அத்திகதியில் இலங்கை மத்திய வங்கியால் (சீபீஎஸ்எல்) பேணப்பட்ட கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கஞ் செய்யப்பட்டுள்ளனவா என்பதும்,

(உ) கடனின் கீழான பற்றுதல்கள் நிதியிடல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்றும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கலிற்காக கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக் கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதுமாகும்

### 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையிலான எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்கள் மற்றும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்கவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2015 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஐஎவ்ஏடீ இன் செயற்திட்டக் கணக்காய்வுக்கான வழிகாட்டிகளுக்கும் இணங்க 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளில் விசேட (டொலர்) கணக்கின் புதுப்பித்தல் மற்றும் மீள் நிரப்பல்கள் மற்றும் அதன் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன மற்றும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியானது அத்திகதியில் இலங்கை மத்திய வங்கியால் (சீபீஎஸ்எல்) பேணப்பட்ட கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கஞ் செய்யப்பட்டுள்ளன என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நிதியிடல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) நிதியிடல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2016 மார்ச் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2016 ஏப்ரல் 29 ஆந் திகதியே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2.2 தீர்க்கப்படாத மீதிகள்

பேராதெனிய பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இளைஞர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் சேவை வழங்குனர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 900,000 தொகை 2013 ஆம் ஆண்டிலிருந்து தீர்க்கப்படாதிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மீளாய்வாண்டிற்கான மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்ற.

| லம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
| | ஐ.அ.டொ. மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐஎவ்ஏடீ | 25.00 | 3,268.75 | 1,404.00 | 26.38 | 224.57 |
| தனியார் கம்பனிகள் | 5.25 | 686.44 | | - | - |
| சீபீஓஎஸ் | 0.76 | 99.37 | | - | - |
| பிஎவ்ஜஎஸ் | 0.39 | 50.99 | | - | - |
| உற்பத்தியாளர்கள் | 0.57 | 74.53 | - | - | - |
| ஜீஓஎஸ்எல் | 0.99 | 129.44 | 107.90 | 1.93 | 14.90 |
| | **32.96** | **4,309.52** | **1,511.90** | **28.31** | **239.47** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்படி தகவல்களின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டமானது பாதீட்டு மதிப்பீட்டில் மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,511.90 மில்லியன் ரூபாயின் 1.87 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 28.31 மில்லியன் தொகையினை பயன்படுத்தியிருந்தது. எனது முன்னைய ஆண்டிற்கான அறிக்கையில் ஒதுக்கீடுகளின் குறைபாட்டில் சமனான சந்தர்ப்பங்கள் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அதில் நிகழ்ச்சித்திட்டத்தினால் வருடாந்த நிதி இலக்குகள் தொடர்ச்சியாக எய்தப்படாதிருந்தமையும் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) நிதி உடன்படிக்கையின் பிரகாரம், பெறுமதி சங்கிலி அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பங்குபற்றல் நிதி நிறுவனங்கள், சமூக சார் அமைப்புக்கள், தயாரிப்பாளர் மற்றும் தனியார் கம்பனிகளால் மொத்த ஒதுக்கீட்டில் 24.15 சதவீதத்தினைப் பிரநிநிதித்துவப்படுத்தும் ஐ.அ.டொலர் 7.96 மில்லியன் பெற உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனினும், குறித்த தரப்பினரிடமிருந்து மொத்தப்பங்களிப்பினையும் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 பௌதீக முன்னேற்றம்

நிகழ்ச்சித்திட்டத்தின் பணிகள் தனியார் துறை மற்றும் சமூக சார் அமைப்புக்களின் தலைமையிலான இளைஞர்களுக்கான நுண்பாக நிதி மற்றும் பயிற்சி வழங்கல் மற்றும் சந்தைப்படுத்தல் சங்கிலி அபிவிருத்தி மற்றும் தொடர்புகள் போன்ற கூறுகளில் கீழ் அமுல்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கீழ்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், சந்தைப்படுத்தல் சங்கிலி அபிவிருத்தி மற்றும் தொடர்புகள் கூறின் கீழ் 49,184 நலனாளிகளை மேவுகை செய்வதற்காக சமூக சார் அமைப்புகளிலிடமிருந்தும் தனியார் துறை வியாபார நிறுவனங்களிடமிருந்தும் 40 வியாபார முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன், அவற்றுள் 7,163 நலனாளிகளை உள்ளடக்கும் 06 வியாபார முன்மொழிவுகள் மாத்திரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமுல்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2004 சனவரியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த நுண்பாக நிதியிடல் நடவடிக்கைகள் 2015 திசெம்பர் மாதம் சீரமைக்கப்பட்டிருந்தன. எனினும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உத்தேசிக்கப்பட்ட நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படாமல் முன்னைய வருடங்களில் வழங்கப்பட்ட உப கடன்களிலிருந்து மத்திய வங்கியின் சிறப்புக்கணக்கொன்றில் மீளப்பெறப்பட்ட ரூபா 99.79 மில்லியன் நிலுவைத் தவணைக் கட்டணங்கள் காணப்பட்டன.

மேற்படி பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதன் நிகழ்ச்சித்திட்டங்களின் அனைத்து கூறுகளின் கீழுள்ள நடவடிக்கைகளின் அமுலாக்கல் மீது மந்தமான முன்னேற்றத்தைக்காட்டியிருந்தது. நிகழ்ச்சித்திட்ட முகாமையாளரினால் அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கமைய, மூன்றாம் தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்ட வியாபார முன்மொழிவுகளின் செல்லுபடியாகும் தன்மையிலேயே நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகளின் வெற்றி தங்கியுள்ளதுடன், மீளாய்வாண்டினுள் நிகழ்ச்சித்திட்டத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்த சாத்தியதன்மையுடைய வியாபார முன்மொழிவுகளின் பற்றாக்குறை காரணமாக, நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான செயற்பாடுகள் மந்தமான முன்னேற்றத்தினை காட்டியிருந்தது. மேலும், நிதி உடன்படிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட பதவிநிலைகளை உறுதிப்படுத்துவதிலான பற்றாக்குறை, உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதிலான பற்றாக்குறை, உயர்வான ஊழியப் புரள்வு, அலுவலக வளாகத்தின் வழமையான மாற்றங்கள், அமுலாக்கல் முகவர்கள் தொடர்ச்சியாக மாறுதல் போன்ற ஏனைய பல காரணங்கள் நிகழ்ச்சித்திட்டதின் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதிலான நலிவான முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருந்தன.